# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 23 திங்கட்கிழமை (05-06-2000) VALAMPURI ஒலி: 168


★ பொதுத்தேர்தல் நடத்துவது குறித்து

# பொ. ஐ. ஐ. முன்னணிக் கட்சிகள்

# 13ஆம் திகதி கூடி ஆராய்வு!

## ஒக்டோபர் முதல் வாரத்தில் தேர்தல் நடைபெறலாம்

(கொழும்பு)

**தற்போதைய பாராளுமன்றத்தின் ஆயுள்காலம் ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் உரிய காலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடைபெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இதேவேளை பதினோராவது பொதுத்தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நியாயமான காரணம் எதுவும் இருப்பதாக தனக்குத் தெரியவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்**

பதினோராவது பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு உரிய கால அட்டவணையை தயாரிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டம் இம்மாதம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது..

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீச்சு

வவுனியா மகா இறம்பைக் குளத்தில் இனம் தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில்

[4ஆம் பக்கம் பார்க்க]

## தேங்காய் ஏற்றிவந்த உழவுயந்திரம் குடைசாய்ந்தது பிரயாணம் செய்த பெண் தேங்காய்க்குள் சிக்கிப் பலி!

(புலோலி)

பளைவேம்பொடுகேணியில் இருந்து தேங்காய் ஏற்றி வந்த உழவுயந்திரப் பெட்டி குடைசாய்ந்ததில் அதில் இருந்து வந்த பெண்மணி ஒருவர் தேங்காய்குவியலுக்குள்சிக்கி பரிதாபகரமான முறையில் பலியானார் அவர்களுடன் கூடவந்த ஐவர் காயமடைந்தநிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தின் நிலை குறித்து ஈ. பி .டி. பி, படைஅதிகாரி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நெருக்கடியினால் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஈ. பி. டி. பி.யின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க, நிஷாந்தன் ,தொடர்பாளர் ஸ்ரீ ஆகியோர்நேற்று யாழ். பாதுகாப்பு தலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

# புலிகள் உட்பட ஏனைய கட்சிகளும் அரசுடன் பேச்சு நடத்த வேண்டும்

[சென்னை]

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து அமைப்புகளும் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக பிரிவுத் தலைவர் கிருபாநிதி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில்செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழீழம் உருவாவதை பி.ஜே.பி எதிர்த்தாலும் இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைப்பதற்கு அவர்களுக்கென தனியான மாகாணம் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(வ-ச)

## இலங்கைத் தமிழருக்கு அதிகஅதிகாரம் வழங்கப்பட வேண்டியது அவசியம்

### மு. கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

செக் என்றும், ஸ்லோவாக் என்றும் இரண்டு குடியரசுகளாக செக்கோசிலோவாக்கியா பிரிக்கப்பட்டது போல இலங்கையையும் இரண்டு பிராந்தியங்களாக பிரிக்கலாம் அல்லது இனப் பிரச்சினைக்கு நிலைத்து நீடிக்கக் கூடிய அரசியல் தீர்வை எட்டக் கூடியவாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள் குமணக் கப்பலில்

[புலோலி]

அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் ''குமண'' கப்பல் காங்கேசன் துறை துறைமுகத்தில்தரித்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில்தற்போது பொருட்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசாருடன் இணைந்து கொள்ள 1500ஊர்காவல் படையினர் சேர்ப்பு

★ வடமத்திய மாகாணத்தில்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் 1500பேர் ஊர்காவல் படைக்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் இதற்கான நடவடிக்கைகளை வடமத்திய மாகண பிரதிப்பொலிஸ்மா அதிபர் மேற்கொண்டுள்ளார்.

பொலிசாருக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகாரண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி அழைப்புகள் குறித்து ரெலிக்கொம் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு தொலைபேசி இணைப்புக்களை பெற விரும்புவோர் இன்றிலிருந்து பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு யாழ்ப்பாண ரெலிகொம்பிராந்திய பொறியியலாளர் தொலைபேசி

[4 ஆம் பக்கம் பார்க்க)

## ஏவுகணைகள் பொருத்தப்பட்ட யுத்தக்கப்பல்கள் கொள்வனவு !

(கொழும்பு

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை முன்னெடுக்கும் வகையில் இலக்குகளைதேடிச் சென்று தாக்கக்கூடிய நவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்ட நவீன யுத்தக்கப்பல்களை இலங்கை அரசு கொள்வனவுசெய்யவுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கின்றன,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாயமடைந்தவர் மரணம்

(வவுனியா)

தென்மராட்சி பகுதியில் ஷெல்தாக்குதலினால் படுகாயமடைந்து மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முருகேசு கந்தையா(வயது.75) கற்குழி சாவகச்சேரி என்பவர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[ந-7]

## மருதானை கோஷ்டி மோதலில் ராணுவம் தாக்கி பொலிஸார் காயம்

(கொழும்பு)

மருதானையில் இடம் பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்றில் சமாதானம் செய்யச் சென்ற பொலிஸார் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதில இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் பயணிகள் கப்பல் சேவை

(கொழும்பு)

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையே விரைவில் புதிய கப்பல் சேவை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

வாரத்திற்கு இரு தடவைகள் நடைபெறும் இச்சேவையானது ஈ,பி,டி.பி தலைவர் டக்ளஸ்தேவானந்தா ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து இச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

தொடரும்ஓயாதஅலைகள் மூன்றுநடவடிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழந்தோரின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு.

★ செந்தூரன்

[இராசசிங்கம் - சிவகரன்]

(4 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### பொய்யா மொழி ஜோதிடம்

சனி, செவ்வாய்க்கிழமைகளில் 140, பருத்தித்துறை வீதி, நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியிலும் ஏனையநாட்களில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில்மடத்திலும் சந்திக்கலாம்.

(683)

### இறைச்சிக் கோழி

கலபேடஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல இலவசம். தொடர்பு -31, மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (671)

### HEMISTRCY

யாழ். நகரில் ஆசிரியர் திரு. அன்புவிடம்இரசாயனவியல் கற்றோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும் தொடர்பு: திரு.அன்பு C.O.L. ROHAN O. L. R.CHURCH வீதி ஆனைக்கோட்டை.

(707)

### A/L 2002 நாடகமும் அரங்கியலும் பிரத்தியேக வகுப்பு

ஆசிரியர் க. ஸ்ரீகந்தவேள் மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(705)

### தவறிவிட்டது

நீர்வேலி வடக்கில வசிக்கும் நவரத்தினசிங்கம் சுதாகரன் என்பவரது 0903001569 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை மானிப்பாய் மருதடி கோவிலுக்கு அண்மையில் 2ம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஜெனிஸ் அச்சகத்தில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். 694)

### தவறிவிட்டது

வரதராஜக்குருக்கள் விக்கினேஸ்வரி. என்னும் பெயருடைய 557331280 v தேசிய அடையாளஅட்டையும் விசேட அடையாள அட்டையும். ஆஸ்பத்திரி, 22ம் வீடுதிக்கும் பஸ்தரிப்பு நிலையத்துக்கும் இடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். வலம்புரியில் அல்லது மடம் ஒழுங்கை கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(699)

### தவறி விட்டது

இரத்தினமகேஸ்வரன்- சரவணபவான் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் ச.சுப்பிரமணியம் 131, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

(692)

### கணக்கிடு-தவா

2001
சொத்து விற்பனை
செவ்வாய், வியாழன்
3. 30 P. M
2002
தனி வியாபார
முடிவுக் கணக்கு
செவ்வாய் வியாழன்
4. 30 p. M
ஆரம்பம் - 6. 6. 2K

திகழ் கல்வி நிறுவனம்
இணுவில்

(சி/422)

## விரும்பிய பெண்ணைக் கைப்பிடித்த மகனை கோடரியால் வெட்டிய தாய்

(யாழ்ப்பாணம்)

பெற்ற தாயேகோடரியால் மகனை வெட்டிய கோரச் சம்பவம் திருநெல்வேலி மார்பண்ணையடியில் இடம் பெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: வெளிநாட்டிலிருந்து வீடு திரும்பிய மகன் தமது சம்மதத்தைப் பெறாமல் பெண் ஒருவரைத் திருமணம் செய்ததால் கோபமடைந்த அந்தக் தாய் மகன் உறக்கத்திலிருந்த வேளையில் கழுத்தில் கோடரியால் வெட்டினார்.

படுகாயமுற்ற மகன் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிவராசா பார்த்திபன்(வயது 29) என்பவரே படுகாமடைந்த இளைஞராவார்.

இதே வேளை தாய் நஞ்சருந்திய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-22)

### தொடர்பு கொள்க

க. கந்தையா, பெரியநாவலடி, கொடிகாமம் வாசி ஆகியநான் யாழ். ஆஸ்பத்திரியில் வாட் :- 30ல் இருந்து கொழும்பு செல்ல. இருப்பதால் எனது தம்பி க. பசுபதியையும், எனது குடும்பத்தாரையும் உடனே வந்து சந்திக்குமாறு கேட்கின்றேன்.

தகவல்
க. கந்தையா
(697) யாழ். ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம்,

### தேடுகின்றோம்

'நவமதி' கச்சாய் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரு, நவரத்தினம் குடும்பத்தைத் தேடுகின்றோம். அறிந்தவர்கள் தகவல் தரவும்.

நா. இராமச்சந்திரன்,
63, செட்டித்தெரு ஒழுங்கை.
நல்லூர்.
(696)

### ஸ்ரீகாந் கல்வி நிலையம்

கே. கே. எஸ்·வீதி, இணுவில்,
கலை, வர்த்தகவகுப்புகள் நடைபெறுகின்றன
A/L 2002

| | |
|---|---|
| தமிழ் | P. மகாலிங்கசிவம் |
| இந்துநாகரிகம் | s. சோதிலிங்கம் |
| அளவையியல் | s. s. மனோகரன் |
| நாடகமும் அரங்கியலும் | K. ஸ்ரீகந்தவேள் |
| புவியியல் | K. சிவகரன் |
| பொருளியல் | E. ஞானேஸ் |

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

நிர்வாகி. (704)

### அறிவித்தல்

கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் நடப்பு ஆண்டுகள் உற்பத்கியில் ஈடுபட்டு இடம் பெயர்ந்த அங்கத்தவர்களுக்கு முற்பணம் வழங்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களும் அனைத்துப்பணியாளர்களும் சகல நெறிபாளர்களும் வடமராட்சி கொத்தணி அலுவலகத்திற்குச் சமூகமளிக்கவும்.

தலைவர்,
பொதுமுகாமையாளர்
கொடிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்.
(கி-430)

### முக்கிய அறிவித்தல்

யாழ். நகரிலும் சாவகச்சேரியிலும் நடைபெற்ற A/L 2000, 2001, 2002 உரிய இரசாயனவியல் வகுப்புகள் பின்வரும் இடங்களில் நடைபெறுகின்றன.

- ★ Subra கல்வி நிறுவனம், சித்தன்கேணி
- ★ Science center கேணியடி, ஆனைக்கோட்டை
- ★ Beacon கலாசாலை வீதி, திருநெல்வேலி

ஆசிரியர் திரு. அன்பு
(706) T. P.No: 3339

### தவறிவிட்டது.

நாகேந்திரம் சுபாதர்சன் என்பவரது தேசிய அ. அட்டை இல: 783231077V, விசேட அ. அட்டை இல: L0906002181 தொழில் அ. அட்டையும் 31-05-2000 அன்று பரமேஸ்வராச் சந்திக்கும் யாழ். செயலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

சண் ஹெட்டா
கே. கே. எஸ் றோட்.
சுன்னாகம்.

யாழ். செயலகம்
(புள்ளி விபரப்பகுதி)
கச்சேரி - யாழ்ப்பாணம்

[661]

### கொடியேற்றம்

அச்சுவேலி நாவலம்பதி அருள் மிகு காட்டு மலைக் கந்தசாமிகோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும். [ச-4]

### வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் எதிர்வரும் 7.6.2000புதன்கிழமைகாலை 9 மணிக்கு சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன என பணிப்பாளர் இராசரத்தினம்அறிவிக்கிறார்.

### இன்றுமுதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மேற்கு யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம் இன்று திங்கட்கிழமை முதல் இயங்கும் என்று அதிபர் எம். ஏ. இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார். (சி)

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விவலயத்துக்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பொன்று இன்று காலை 10 மணிக்கு வலயப்பணி மனையில்நிகழும் [சி]

### மணீஸ் வெளியீடு இல:-3

தரம் ஐந்து புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் 3வது வெளியீடு 10-06-2000 வெளிவரும்.

விபரங்களுக்கு
மணீஸ் வெளியீடு,
மே/ பா. சதாபொன்ஸ்,
அல்வாய்.
(கி 428)

### ஐடியல் அக்கடமி

(நாதன் மற்ஸ் அக்கடமி)
சண்டிலிப்பாய்
A/L 2000. 2001. 2002
*DAYCLASS*
கலை வர்த்தக வகுப்புகள்

| | |
|---|---|
| தமிழ்- | திரு. V.M. லிங்கம் |
| இ. நாகரிகம் / இ. சமயம் | திரு. T. ஸ்ரீஸ் |
| அளவையியல்- | திரு. E.S.பவன் |
| பொருளியல்- | திரு. S. ஜெயகுமார் |
| கணக்கீடு- | திரு. S. நித்தி |
| வணிகக்கல்வி- | திரு. N. நந்தீஸ் |

நாடகமும் அரங்கியலும் பிரபல ஆசிரியர்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2000 - 06 - 05 திங்கள் மாலை4 - 00மணி
(675)

### அறிவித்தல்

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கும் சகல பணியாளருக்குமான சந்திப்பு எதிர்வரும் 07-06-2000புதன்கிழமை காலை 11.00 மணிக்கு கட்டைவேலி நெல்லியடி ப. நோ கூ. சங்கத்தில் நடைபெறவுள்ளது. தயவு செய்து சகலரும்கலந்துகொள்ளவும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
தலைவர் பொதுமுகாமையாளர்.
(கி-427)

### TRRO computer Training center

தற்காலிக முகவரி;-
உரும்பிராய் -மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.

எமது நிறுவனத்தில்,
MS Office
ComputerPrinters
NCCA
Children Programe
Visual Basic

மேற்படி கற்கை நெறிகளைப் பயிலுகின்ற மற்றும் புதிதாகப் பயில விரும்பும் மாணவர்களையும் 09-06-2000 (வெள்ளிக்கிழமை) க்கு முன் எமது மேற்படி அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முக்கிய குறிப்பு:- குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யுமாறு அமைக்கப்படும்.

தலைவர்
(கி-429) அ. நல்லதம்பி

''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும் மாறாநீர் வையக்கு அணி''

- குறள்

# வலம்புரி

## ஆசிரியன்

ஆசிரியன் சமூக சிற்பி. ஆக்கத்தின் ஊற்று. நல்லாசிரியனுக்கு பல்லாயிரம் மாணவர்கள் பக்க பலம். இன்றைக்கு அவலப் போக்க ஆக்க பூர்வமான பணிகள் முன்னெடுக்கக் கூடிய வல்லமைப்பாடு ஆசிரியர்க்கு உண்டு. வட புலத்து ஆசிரியர் எண்ணிக்கையில் கணிசமான காருண்ய உள்ளம் படைத்த ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொருவருக்கும் ஐந்து விசுவாசமான பற்றுறுதியுள்ள மாணவர்களையும் சேர்த்துக்கொண்டால் திட்டமிட்ட செயற்பணியில் முடியாதது இல்லையாதாகிவிடும்.

இடப்பெயர்வால் இன்னலுறும் மக்கட்கு உதவு கரம் நீட்ட முன் வந்த தமிழா ஆசிரியர் சங்கத்தையும் துணைப்பொதுச் செயலாளரையும் பாராட்ட வேண்டும். வகுப்பறைக் கற்பித்தல் மட்டும் தான் ஆசிரியர் பணியல்ல. அப் பணி சீர்குலைந்தவேளை சிதைந்த திருந்திசீரிய பல பணிப் புலத்தை எட்டிப்பார்க்கலாம்.

கல்வியின் இன்றியமையாமையைக் கருத்திற் கொண்டு அதன் ஏணிப் படிகளால் ஏறி உயர்ந்தவர்கள் மலிந்த மண். எமது தாயகம். அரச அதிபரும் ஆசிரியர் சங்க துணை செயலரும், வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் இராசையாவும் இணைந்து கல்வித்தடங்கலை நீக்க எடுத்த தீர்மானங்கள் ஆரோக்கியமானவை பாராட்டுக்குரியவை, காலத்தின் தேவையுமாம். மேம்பாட்டுக் கழகங்களால் கலையும், கல்வியும் வளர்ந்த, வளர்த்த மண் வடபுலம் என்பதை மறக்காது அவ்வழியிற் செல்ல பெரியோரும் கல்விமான்களும் முனைய வேண்டுமே.

காலத்தின் தேவையுணர்ந்து கன்றிய உள்ளங்களின் கண்ணீர்துடைக்க முன் வந்த கல்விப் புலம் வாழ்க, அத்தகைய சிந்தனையோடு வளர்க்கப்படும் தியாக உணர்வுடைய தீரர்களே எம்மண்ணுக்குத்தேவை.

எது எவ்வாறாயினும் நமது மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் தீர வேண்டும். எங்கள்தியாகம் வீண் போகமாட்டாது. 'இன்றெமைவாட்டும்இன்னல்கள் மாய்' என்ற பாரதியின் வாக்கு மெய்ம்மையாக காலம்கடிதினில் வரவேண்டும் கடவுளர் கருணை எம்பக்கமாக

ஆசிரியர்

# 40 மாணவர்களுக்கு மேல் வகுப்புகளில் அனுமதிக்கக்கூடாது

## கல்வியமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும் போது ஒரு வகுப்பில் 40 மாணவர்களுக்குமேல் இருக்கக்கூடாதுஎன கல்வி அமைச்சு வலியுறுத்திக்கூறியுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதுதொடர்பான சுற்றறிக்கை ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்தும் அதனைச் சில பாடசாலைகள் மீறி நடந்துள்ளன.

இதனால் அத்தகைய பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அறிவுறுத்தல்வழங்கி உள்ளதுடன், மாணவர்களின் தொகைக்கேற்பஉயர் வகுப்புக்களை வகுத்து கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் கேட்டுள்ளார்.

[வ]

# சீரற்ற மின்சார விநியோகத்தால மின்பாவனையாளர் மத்தியில அதிருப்தி

[யாழ்ப்பாணம்]

தற்போது மின்சார சபையினால் வழங்கப்பட்டுவரும் மின்சார விநியோகம் சீரற்றவிதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பரவலாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம், உடுவில், மருதனார்மடம், மல்லாகம், போன்ற பகுதிகளிற்குத் தொடர்ந்து 24 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுவதாகவும் ஏனைய பகுதிகளுக்கு மாலையில 1 மணிநேரம் மாத்திரம் மின்சார, விநியோகம் நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

முன்பு காலையில வழங்கப்பட்டு வந்த 1 மணி நேர விநியோகமும நிறுத்தப்பட்டுவிட்டது. மாலையில சகல நுமேவிட்டில் நிறபா என்ற நிலையு கி ய து. எனவே இச் சீரற்ற நிலை நீக்கப்பட்டுஒரே சீரான வகையில காலையில மின்சார, விநியோகம் சகல பகுதிளுக்கும் கிடைக்க ஒழுங்கு மேற் கொள்ளப்படுவத்த நீதியாகும என மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கிறார்கள்

(சி)

# பிள்ளைகளின் கல்வியில் கரிசனையில்லா பெற்றோர் மீது சட்டநடவடிக்கை

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாத பெற்றோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்'' என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாடசாலைகளுக்குச் செல்லக, 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களைப் பாடசாலைகளில் சேர்த்து கல்விகற்குமாறு; நிர்பந்திக்கும் திட்டமொன்றை அரசு ஆரம்பித்திருப்பதாககல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய வயதுடைய சுமார் 50,000 சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. என்றும் சேரிகள், கிராமப்புறங்களில் வாழும் பிள்ளைகளே இந்நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள் என்றும் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் இந்த சிறுவர்களுக்குக் கல்வியை வழங்குவதற்கென கல்வி அமைச்சும், யுனிசெப் நிறுவனமும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் பத்திரன மேலும் தெரிவித்துள்ளார்.

(சி-4)


## அறிவித்தல்

பவானி கச்சான் அலுவா ஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரையும் நாளை(06-06-2000) அன்று காலை 10 மணிக்கு பின்வரும் முகவரியில் (பழைய இடத்தில்)வருமாறு தரவும்.

பவானி கச்சான் அலுவா
32/1, கல்லூரி வீதி. நீராவியடி,
யாழ்ப்பாணம், (710)

## கொனிக்கா கலர் லாப்

இல. 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி.
யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் வழமைபோல் அதே இடத்தில் இயங்குகிறது

★ தற்போதைய சூழ்நிலையில் எமது வாடிக்கையாளர்கள் நன்மை கருதி உங்கள் புகைப்படச் சுருள்களை உடனுக்குடன ஒரேநாளில் பிரதியாக்கம் செய்து பெற்றுக் கொள்ளவும்.

★ சகல நிகழ்வுகளையும் தரமானமுறையில் கலர்ப் புகைப் படம் பிடித்திடவும துரிதகதியில் கடவுச் சீட்டுப் படம், அடையாள அட்டைப்படங்களை பெறவும்.

நீங்கள் நாடவேண்டிய இடம்:

தலைமையகம் | கிளை நிறுவனம்:

கொனிக்கா கலர் லாப்

14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, (பெருமாள் கோவில் அருகில்) யாழ்ப்பாணம்.

100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: எம்மிடம் இதுவரைகாலமும் ஒப்படைக்கப்பட்ட உங்கள் புகைப்படச்சுருள்கள் பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளது, உரியவர்கள் உடனடியாக பெற்றுக் கொள்ளவும்.

சிறி அமலா ஜுவலர்ஸ் 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். எமது வழமையான முகவரியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

(709)

## விஞ்ஞானபீட மாணவர்களுக்கு

தென்மராட்சியைச் சேர்ந்த கீழ்வரும்விஞ்ஞான பீட மாணவர்களின் தகவல்களை அறிய விரும்புகின்றோம். தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும்.

1st year

1) miss. S. சுகந்தினி (மீசாலை)
2) Mr. N. இலவனன் (நுணாவில்)
3) Miss. V. தபோதினி (விடத்தற்பளை)
4) Miss M. சுகன்யா (நுணாவில்)
5) Mr. தர்மசீலன் (நுணாவில்)
6) Miss. சுபாசினி (நுணாவில்)
7) Mr. டயஸ் (மட்டுவில்)
8) Miss. அபிராமி (சங்கத்தானை)
9) Mr. ராதாகிஸ்ணன் (நுணாவில்)

2nd year

1) Mr. இளங்குமரன் (விடத்தற்பளை)
2) Miss. S. கவிதா (நுணாவில்)

3rd year

1) Miss. R. சகித்தா
2) Miss. R. ரேணுகாபதி (நுணாவில்]
3) Mr. K. தயாபரன் (நுணாவில்]
4) Miss. பிரேமிலா (நுணாவில்)
5) Mr. T. ஞானவேல் (கொடிகாமம்)
6) Miss. T. கௌசல்யா (மட்டுவில்)

4th Year

1) Miss. S. சுபாஜினி (கச்சாய்)

செயலாளர்
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

[701]

## எரிக் கணேஷ்

02.06.2000 முதல் கொக்குவில்
சந்திக்கு அருகாமையில்
எரிக் கணேஷ் மூக்குக் கண்ணாடி
அகமும் பார்மஸியும்
இயங்குகின்றது அத்துடன் யாழ். நகரில் காலை 9.00மணி தொடக்கம் 1.00மணி வரையும் தொடர்ந்து இயங்கிவருகின்றது. என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம்.

(கி-414)

## சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்

சம்பந்தன் மெடிக்கல் கிளினிக் 22, இராமையா செட்டியார் ஒழுங்கையில் வழமை போல் இயங்குகிறது.

(698) நிர்வாகி

## A/L 2000

" கணக்கீடு "
D. SAM

பரீட்சையை எதிர் நோக்கியிருக்கும் மாணவர்களுக்கான வகுப்பு!
யாழ். நகரில் வசிக்கும் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

முகாமைக் கணக்கீடு
( கணக்கீட்டு விகிதாசாரம் )

ஆரம்பம்: 07-06-2000 புதன்கிழமை
நேரம்: 10.00 மணி (ப.நே.) பிரத்தியேக வகுப்பு

70/2 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(7 8)

## தேடுகின்றோம்

சாவகச்சேரி, கல்வயலைச்சேர்ந்த V. பாலசுப்பிரமணியம் அவர்களையும் அவரது மனைவியையும் தேடுகின்றோம் தகவல் அறிந்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

வி. மகாலிங்கம்
75, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(695)

## அறிவித்தல்

தரம் ஐந்து மாணவர்களுடைய பெற்றோர் 06-06-2000 செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் சமுகம் தரவும்.

அதிபர்.
யா/சென்.பெனடிற்
றோ.க.த.க.பாடசாலை.

(641)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதி களில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த் தப்பட்டு மீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக் கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## உதவிக் கல்விப்பணிப்பாளர் வீட்டில் துணிகரத் திருட்டு

[யாழ்ப்பாணம்]

உடுவில் பகுதியில் கடந்த சில வாரங்களாக திருடர் களின் தொல்லை அதிகரித் துள்ளமை குறித்து இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள் ளனர்,

கடந்த வாரம் உடுவில் லவ்லேனில் உள்ள யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரின் வீட் டில் இரவு நேரம் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், உடமை களையும் எடுத்துச் சென்றுள் ளனர்.

உறவினர்களால் பாது காப்பிற்காக வைக்கப்பட் டுள்ள உடமைகளையும், வட மாகாண ஆசிரியர் சங்க சகாயநிதியம் இங்கு இயங்கி வருவதையும் அறிந்த திருடர் கள் இத்திட்டமிட்ட திருட்டை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில நாட்க ளுக்கு முன் உடுவில் மான்ஸ் வீதியிலுள்ள எஸ். கந்தசாமி என்பவரின் வீட்டிலிருந்தும் பல லட்சம் ரூபா பெறுமதி யான தங்கநகைகள் திருடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. ந)

### இலங்கைத்...

இலங்கைத் தமிழர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப் படவேண்டும். இவற்றில் ஏதாவதொன்றை இலங்கை அரசு ஏற்கவேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித் துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினமிரவு பொதுக்கூட்ட மொன்றில் பேசிய கருணாநிதி மேலும் தெரிவித்ததாவது:

இரத்தக்களரி ஏதுமின்றி செக்கோசிலோவாக்கியா பிரிக்கப்பட்டதை நினைவூட் டியதுடன் தமிழக அரசு சார்பில் இக் கருத்தைத் தெரி விக்கவில்லை என்றும் தி. மு. க. சார்பில் இக் கருத் தைத்தான் கூறுவதில் தவறில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-ச)

### விரைவில்...

சேவை நடாத்தப்படவுள் ளது.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவையின் ஏற்பாட் டில் விசேட சேவை ஒன்று நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-க)

### பொலிசாருடன்...

மாக பொலிசாருடன் இணைந்து செயற்படுவதற் காகவே இந்த 1500 ஊர்கா வல் படையினரும் சேர்க்கப் படவுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது. [ந]

### யாழ்ப்பாணத்தின்...

அதிகாரி பிரிகேடியர் பொன் சேகாவைச் சந்தித்து எடுத் துக்கூறினார்.

பலாலி படைத்தலைமையகத் தில் இடம்பெற்ற இச்சந்திப் பில் அத்தியாவசியப்பொருட் களுக்கு நிலவும் தட்டுப்பாடு கொழும்பு செல்வோருக் கான கப்பல்சேவை அநா வசியமான கைது, திருடர் கள் தொல்லை போன்ற பல் வேறு பிரச்சினைகள் எடுத் துக்கூறப்பட்டது,

இது குறித்து தாம் உடன் நடவடிக்கை எடுப்பதாக பிர்கேடியர் பொன்சேகா உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது- [ந]

## மரண அறிவித்தல்

### தேவநேசன் செல்வமணி

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஜெகோவாவின் சாட்சிகளின் சபையைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய ஆசிரியையுமான திருமதி. றூத் தேவநேசன் செல்வமணி நேற்று (04 - 06 - 2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆ. தேவநேசன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிறிஸ்ரி செல்வநேசன், பிறின்ஸ், ஜெபநேசன், (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாள்ஸ் ஜெகோநேசன், ஸ்ரான்லி யேசுநேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரகுதேவி, சுலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சார்ளஸ் சுதா நேசன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05- 06- 2000) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு செ. தவராசாவின் இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

செ. தவராசா

(மருமகன்)

சின்னப்பா விதி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(711)

## வளக்கம்பரையில் கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் வளக்கம் பரை ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற் சவம் நாளை மறுதினம் கொடியேற்றத் திருவிழா வுடன் ஆரம்பமாகி இம் மாதம் 19ந் திகதி வரை நடைபெறும். திருவிழாக்கா லங்களில் இப் பகுதியில் ஊர டங்கை குறிப்பிட்ட நேரம் தளர்த்துவதற்கு வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் என். திரிலோகன் நடவடிக்கை எடுத்ததையடுத்து மாலை நேரத்தில் மேலும் ஒரு மணித்தியாலம் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

## நடிகர் ஜெய் காலமானார்

(சென்னை)

சினிமாத்துறையில் முன் னணி நடிகராக விளங்கிய நடிகர் ஜெய்சங்கர் தனது 62வது வயதில் சென்னை அப் பலோ மருத்துவமனையில் மாரடைப்பால் நேற்று கால மானர்.

இவரது மறைவு குறித்து சினிமாத்துறை பிரமுகர்கள் பலர் அனுதாபம் தெரிவித் துள்ளனர். (க)

### மருதானை...

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது இராணுவத்தி னருக்கும் ஒரு கோஷ்டி யினருக்கும் இடையில் ஏற் பட்டமோதல் சம்பவத்தின் போது சமாதானம் செய்யச் சென்ற பொலிஸார் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதில் ஒரு சார்ஜ னும் ஒரு பொலிஸாரும் காய மடைந்துள்ளனர். [வ]

### கைக்குண்டு...

'புளொட்' அமைப்பைச் சேர்ந்த மூவர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர்.

வவுனியா நரசிம்மர் கோவில் உற்சவத்தில் கலந்து விட்டு வீடு திரும்பிய பொழுதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

[வ-க]

### உணவு...

இறக்கிக்கொண்டிருக்கும் ''வாதுவ'', 'இந்துருவலி' ஆகியவற்றிலிருந்து பொருட் கள் இறக்கப்பட்டபின் குமண கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்படு மென துறைமுக வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

[வ-55]

### ஏவுகணைகள்...

இலங்கை கடற்படை இஸ்ரே லிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'டோறா' படகுகளை மேம்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுவரு கிறது.

கடந்த மாதம் இஸ்ரேலிட மிருந்து நவீன ரக போர் விமானங்களை இலங்கை அரசு பெற்றுக்கொண்டமை யும் இங்கு குறிப்பிடத் தக்கது.

### தேங்காய்

பளைவேம்பொடுகேணியில் இருந்து தேங்காய் ஏற்றி வந்த உழவுயந்திரம்- மிருசு விலை அடைந்தபோது விபத் தில் சிக்கி அதில் பிரயாணம் செய்துவந்த விக்கினேஸ் வரன் சின்னப்பிள்ளை [வயது 43] என்பவரே பலியானவ ராவார்.

காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டோர் விபரம் வருமாறு

பசுபதி கணேஸ்வரி [வயது 36], தில்லையம்பலம் விக்ன ராஜா (வயது 43], யோக ராஜா சுலோசினி [வயது23] புவனேந்திரன் வாசுகி (வயது 25), சின்னத்தம்பி இராமச் சந்திரன் [வயது 40]

(வ 52)

## தீர்த்தம் ஆடினான் திருநகர் இணுவையில்

ஆர்த்தன பேரிகை அணிமுர சொலித்தன
பார்ப்பனர் வேதமும் பல்லியம் இயம்பினர்
தீர்த்தமும் ஆடினான் திருநகர் இணுவையில்
பார்த்தவர் கண்களில் பக்திநீர் வழிந்தன

பரராஜ சேகரப் பிள்ளையார் கோயிலில்
வரமீனும் அபயமும் வரதமும் தும்பியின்
கரமேவு ஆசிகள் கணபதி தந்தனன்
வரமான சாந்தியும் வாரணன் அருளுவான்

மஹாவித்துவான்

(இணுவில் பரராஜ சேகரபிள்ளையார் தீர்த்தோற்சவத்தை ஒட்டிய கவிதை இது.)

## மகப்பேற்று நிலையம் வழமைபோல் இயங்கும்

யாழ். மாநகர சபைக்குட் பட்டபிரதானவீதி, மடத்தடி மகப்பேற்று நிலையம் நாவ லர் வீதி மகப்பேற்று நிலை யம் [கிரிப் பிள்ளையார் கோவில் அருகாமை] ஆகி யன வழமைபோல் இரவு, பகல் சேவையை வழங்கி வரு வதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் அறிவித்துள் ளார். (ந)

### தொலைத்...

பாவனையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

வெளியிடங்களுக்கு தொலைபேசி இணைப்பு பெற விரும்புபவர்கள் 101 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தொலைபேசி அழைப்புக் களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தனியார் தொலைத் தொடர்பு வாடிக்கையாளர் கள் தினமும் காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை யும் பிற்பகல் 1.00 மணிமுதல் 2,00 மணிவரையும் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையும் 101 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது தொலைபேசி அழைப்புக்க ளைப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கி கள், தினமும் காலை 9மணி முதல் 10-30 மணிவரையும், பிற்பகல் 2 மணிமுதல் 2.30 மணிவரையும் 101 இலக்கத் துடன் தொடர்பு கொண்டு தமது தொலைபேசி அழைப் புக்களைப் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி அழைப்பு களை பதிவு செய்தபின் அது சம்பந்தமான விசாரணை களை 2258 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்றும், தனி யார் தொலைபேசி வாடிக் கையாளர்களும், அரச திணைக்கள கூட்டுத்தாபன வங்கிகளும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் மட்டும் தொலைபேசி அழைப் புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட் டுள்ளார். (வ)

### பொ.ஐ.ஐ...

இக்கூட்டத்தில் நாட்டின் தற்போதைய இக்கட்டான நிலை குறித்தும் பொதுத் தேர்தலை நடத்தக்கூடிய உகந்த சூழ்நிலை உள்ளதா எனவும் ஆராயப்படவுள் ளது.

எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் 24ஆம் திகதியுடன் பாராளு மன்ற ஆயுட்காலம் முடிவ டைய உள்ளது தெரிந்ததே.

இக்கூட்டத்தில் உரிய நேரத்தில் பாராளுமன்றத் தைக் கலைத்துவிட்டு எப் போது தேர்தலை நடாத்துவ தென்று தீர்மானிக்கப்பட வுள்ளது.

11ஆவது பொதுத் தேர்தல் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறலாம் என பொ. ஐ. ஐ. முன்னணி செயலரும் காணி விவசா யத்துறை அமைச்சருமான டி. எம். ஜெயரத்தினாவும் அமைச்சர்களான றிச்சட்பத் திரன, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் தெரிவித்துள்ள னர்.

குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் நடைபெறுமானால் தேர்தலில் போட்டியிட்டு வடக்கு கிழக்கில் ஏழு ஆச னங்களைத் தமது கட்சி கைப் பற்றும் என ஈ. பி. டி. பி. யினர் கருத்துத் தெரிவித்துள் ளனர்.

இதேவேளை ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன நாட்டின் தற் போதைய சூழலில் தேர்தல் நடத்தக்கூடிய சாத்தியம் குறைவாக காணப்படுவதால் தேர்தல் பற்றி சிந்திக்கும் நிலையில் நாம் இல்லை என்று தெரிவித்துள்ளன. (வ)

### தடை ரத்து

அவசரகாலப் பிரமாணங் களின் பிரகாரம் ஜனாதிபதி யினால் பிரகடனம் செய்யப் பட்ட பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்களை நடத்துவதற் கான தடை இன்றுடன் ரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (வ)

### புலிகள்...

யாழ்ப்பாணம்.

★ எழில்வேந்தன் [கணபதிப்பிள்ளை - விக்கி னேஸ்வரன் திருகோணமலை.

★ ராம்/மதிஇன்பம் [இரட்ணசிங்கம்விஜயகு] மார்] திருகோணமலை.

★ அரசுதங்கன் [தெய்வேந்திரம் - ஜெகநா தன்] யாழ்ப்பாணம்

★ குமாரகிரன் வடிவேல் - கோபாலகிருஸ் ணன்] மட்டக்களப்பு.

★ சுரேஸ் [திரவியம் - விஜயகுமார்] கிளிநொச்சி

★ சுமித்திரா [தம்பிராசா- பரமேஸ்வரி] மட்டக்களப்பு

★ மலர்மதி [சங்கர் - லோகேஸ்வரி] கிளிநொச்சி

★ வாகிசன் - றமணன் [சற்குணம் - லஷ்மன்] யாழ்ப்பாணம்

★ தாமரையன் [குணசேகரம் - இராஜசே கரம்] யாழ்ப்பாணம்

★ குறிஞ்சான் [கிருஸ்ணபிள்ளை - தவசி லன்] மட்டக்களப்பு

★ குழல்வாணி (அன்ரன் குயின்மேரி) வவுனி யா.

சிறப்பு எல்லைப்படை உறுப்பினரான (மார்க்கண்டு திருநாவுக்கரசு) திருகோணமலை.

காவல்துறைப் பரிசோதக ரான (நாகேஸ்வரன் ஜெயப்ர காஷ்) திருகோணமலை.

(கி-4)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரி னால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.